## யூரோ கால்பந்து போட்டி:

# 35 லட்சம் வெள்ளிக்கான பந்தயப்பிடிப்பு முறியடிப்பு

## 27 பேர் கைது

(எம்.சின்னப்பன்)

ஜொகூர்பாரு, ஜூன் 24- யூரோ கால்பந்து போட்டி 2016இல் கள்ள பந்தயப் பிடிப்புக்கு எதிராக போலீசார் ஜொகூர் மாநிலம் முழுவதும் மேற்கொண்ட 25 சோதனை நடவடிக்கையின்போது 27 பேர் கைது செய்யப்பட்டதுடன் 35 லட்சம் வெள்ளி மதிப்புடைய பந்தயப் பிடிப்பை முறியடித்ததுடன் 53 ஆயிரத்து 331 வெள்ளி, 5 ஆயிரத்து 789 சிங்கப்பூர் டாலர் போன்றவற்றை கைப்பற்றியதாக ஜொகூர் மாநில போலீஸ் தலைவர் டத்தோ வான் அமாட் நஜ்முடின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த ஜூன் 10ஆம் தேதி முதல் ஜூன் 23ஆம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது போலீசார் ரொக்கம் போன்றவற்றை கைப்பற்றியதுடன் 5 கணினிகள், 4 மடிக் கணினிகள், மூன்று மேஜைகள், 24 கைப்பேசிகள், எழுதுவதற்கு பயன்படுத்தும் 105 வெள்ளை தாட்கள் போன்றவற்றையும் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்ததாக அவர் சொன்னார்.

கைதான அனைவரும் 20 முதல் 40 வயதுடைய மலேசிய சீனர்கள் என்று கூறிய அவர், இந்த யூரோ கால்பந்து போட்டி கள்ள பந்தயப்பிடிப்புக்கு எதிராக போலீசார் வரும் ஜூலை 10ஆம் தேதி வரை நடவடிக்கையை மேற்கொண்டு வருவார்கள் என அவர் கூறினார்.



கைப்பற்றப்பட்ட ரொக்கம், கணினிகள் போன்றவற்றை டத்தோ வான் அமாட் நஜ்முடின் செய்தியாளர்களிடம் காண்பிக்கிறார்.

# வழக்கில் வர்த்தகர் சாமிநாதன் வெற்றி



வழக்கில் வெற்றிபெற்ற வர்த்தகர் சாமிநாதனுடன் அவரின் வழக்கறிஞர்.

(ஆர்.குணா)

கோலாலம்பூர், ஜூன் 24- வர்த்தகர் சாமிநாதன் என்பவர் தமக்கு 9 லட்சத்து 86 ஆயிரத்து 700 வெள்ளி வழங்க வேண்டும் என்று கோரி ஷாமிலா நான்சி டேவிட் வழக்கு தொடுத்திருந்தார். பணம் வாங்கியதற்கான ஒப்பந்தம் எல்லாம் இருக்கிறது என்ற அடிப்படையில் இவர் போட்ட வழக்கு 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. செஷன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பு வர்த்தகர் சாமிநாதனுக்கு சாதகமாக இருந்ததால் ஷாமிலா கோலாலம்பூர் நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்தார்.

நேற்றுமுன்தினம் வழக்கினை விசாரித்த உயர் நீதிமன்றம் ஷாமிலாவின் மேல் முறையீட்டை தள்ளுபடி செய்து செஷன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பினை நிலை நாட்டியது.

இருவருக்கும் ஏற்பட்டதாக கூறப்படும் ஒப்பந்தத்தில் உருப்படியாக எந்தவோர் ஆதாரமும் இல்லை என கோலாலம்பூர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி டத்தோ ஹஸ்னா பிந்தி முகமட் தெரிவித்தார். இதனால் மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. வர்த்தகர் சாமிநாதன் சார்பில் வழக்கறிஞர் முனியாண்டியும் எம்.டினேஷும் ஆஜரானார்கள். ஷர்மிலாவை வழக்கறிஞர் கே.ஹரிகிருஷ்ணன் பிரதிநிதித்தார்.